**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 434/2023**

**Prosecution witness : அ.சா. 10** **Date : 21.07.2025.**

| Name : சுபாஷ் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சேலத்தில் குடியிருந்து பேக்கரி கடை நடத்தி வருகிறேன். புகார்தாரரை எனக்கு தெரியாது. அ.சா.1யை யார் அடித்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 02.08.2019ம் தேதி மேச்சேரி பேருந்து நிறுத்தம் அருகே ஆஜர் எதிரி குடிபோதையில் பதிவு எண் இல்லாத யமாஹா FZ இரு சக்கர வாகனத்தை பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக நிறுத்தி பிரச்சனை செய்து கொண்டிருந்ததால் அங்கு தகவல் கேட்டு வந்த போலீசாரை கெட்ட வார்த்தையால் திட்டி, கையால் மூக்கில் குத்தினார் என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை.

சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.